# சபரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்

## மூன்றாம் தவணை

## சுகாதாரம் தரம் - 07

பெயர்:........................................... வாரம் - 01



### *விளையாட்டு விதிமுறைகளுக்கும் ஒழுக்க விழுமியங்களுக்கும் மதிப்பளிப்போம்.*

விதிமுறைகள் ஒழுக்கவிழுமியங்கள் என்பது யாதெனில்,

- விதிகள் என்பது விளையாட்டுக்களில் அனுமதிக்கப்பட்டவை, அனுமதிக்கப்படாதவைகள் தொடர்பான அறிவிப்புக்களாகும்.
- முறைகள் என்பது யாதாயினுமொன்றைச் செய்யும் விதத்தினை தெரிவிக்கும் அறிவிப்புகளாகும்.
- ஒழுக்கநெறிகள் என்பது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான நடத்தைச் சம்பிரதாயங்களாகும்.

**பயிற்சி செயற்பாடுகள்**

01) ஒழுக்கமுள்ள விளையாட்டு வீரனுக்குரிய பண்புகளை எழுதுக.
02) விளாையட்டு விதிமுறைகள் என்றால் என்ன?
03) முதல் ஒலிம்பிக் போட்டி எத்தனையைாம் ஆண்டு இடம்பெற்றது?
04) விளையாட்டுக்களுக்கு சட்டதிட்டங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன?

• யாதாயினுமொரு விளையாட்டு வீரன், விதிமுறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் வீரனுக்கும், பாடசாலைக்கும், சமூகத்துக்கும் அவசியமாகும் விதம் பின்வருமாறு:

**(1) தனக்கு (விளையாட்டு வீரனுக்கு,குடும்பத்துக்கு)**

- விதிகளை மதிக்கும் பிரஜையாவதற்கான அனுபவங்களைப் பெறுதல்.
- முரண்பாடுகள், பிரச்சினைகளின்றிப் போட்டிகளில் ஈடுபட முடிதல்.
- பிரத்தியேக ஆளுமைப்பண்புகளை விருத்தியாக்கக்கூடிய வாய்ப்பு
- அனைவராலும் கௌரவப்படுத்தப்படுதல்
- தலைமைத்துவ / பின்பற்றுதல் பண்புகளை விருத்தியாக்க முடிதல்.
- ஒற்றுமை, நட்பு என்பன விருத்தியாகுதல்.
- வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மை
- பிறரின் உதாசீனத்துக்கும் / வசைக்கும் ஆளாகாதிருத்தல்
- தண்டனைகளுக்கு ஆளாகாதிருத்தல்

- கௌரவமான மகிழ்ச்சியையும், இரசனையுடனாக அடைதல்.
- தனக்கும் குடும்பத்துக்கும் கௌரவம், மதிப்பு ஏற்படுதல்.

**(2) பாடசாலைக்கு**

- பாடசாலையின் பிரபல்யம், மதிப்பு உயருதல்.
- முரண்பாடு, பிரச்சினைகளற்ற போட்டிகளை நடாத்தக்கூடியதாக அமைதல்.
- எல்லா மாணவர்களினதும் பிரத்தியேக ஆளுமைப்பண்புகள் விருத்தியாவதற்கான ஒற்றுமை, நட்பு என்பன விருத்தியாகுதல்.
- வெற்றி தோல்விகளைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவிருத்தல்.
- பாடசாலையிலுள்ள அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுதல்.

**(3) சமூகத்துக்கு**

- விதிகளுக்கு ஒழுகும் பிரஜைகள் உருவாவதற்கான அடிப்படை ஸ்தாபிக்கப் படுதல்.
- சமூக முரண்பாடுகள், பிரச்சினைகள் ஏற்படாதிருத்தல்.
- முழுச் சமூகத்தினதும் ஒற்றுமை, நட்பு என்பன விருத்தியாகுதல்.
- வெற்றி தோல்விகளைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுதல்.
- சமூக ஒற்றுமை விழுமியங்கள் பாதுகாக்கப்படுதல்.
- கௌரவமான மகிழ்ச்சியை அடையச் சமூகத்துக்குச் சந்தர்ப்பங்கள் அமைதல்.

## பயிற்சி செயற்பாடுகள்

01) விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் முக்கியத்துவம் 5ஐ எழுதுக.
02) விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் நன்மைகள் 5ஐ எழுதுக.
03) விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்கவிழுமியங்களை பின்பற்றுவதினால் பாடசாலைக்கு கிடைக்கும் நன்மைகள் 5ஐ எழுதுக.
04) விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்கவிழுமியங்களை பின்பற்றுவதினால் சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் 5ஐ எழுதுக.
05) தீர்பாளர்கள் தீர்ப்புகளுக்கு எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும்?